முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 435/2015

தேதி : 03–09–2025

(பி.வா.சா.2) – திரு.ரங்கசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1. 1ம் பிரதிவாதி கோவையில் உள்ள வடவள்ளியில் கடந்த 30 ஆண்டாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் நாச்சிமுத்துவின் பிள்ளைகள் என்றால் சரிதான். நானும், 5ம் பிரதிவாதியும் 3ம் பிரதிவாதியின் மக்கள் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி இறந்துபோன 2ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 2, 6ம் பிரதிவாதிகளுக்கு பிள்ளைகள் இல்லை என்றால் சரிதான். 1 அயிட்ட சொத்து 1முதல் 3 பிரதிவாதிகளின் தந்தையான நாச்சிமுத்து கவுண்டருக்கு 15.07.1966ல் (பி.வா.சா.ஆ.6) பத்திரத்தின்படி பாத்தியம் என்றால் சரிதான். 2ம் அயிட்ட சொத்து மேற்படி நாச்சிமுத்துவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 3, 4ம் அயிட்ட சொத்துக்கள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் கருப்பாத்ததாள் என்பவருக்கு 24.03.1975ம் தேதிய கிரைய பத்திரத்தின்படி (பி.வா.சா.ஆ.7) பாத்தியம் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் உள்ளது என்றால் சரிதான். 3, 4ம் அயிட்ட சொத்துக்களை பொறுத்து நான் மற்றும் 1, 3 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதிக்கு 01.12.2009ம் தேதி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி முகவர் என்ற முறையில் கிரையம் செய்தது போக 3, 4ம் அயிட்ட சொத்துக்களில் 1/3 பாகம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி கிரையத்தின்மூலம் கிரைய தொகையை 1ம் பிரதிவாதியின் பாகத்தை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, முழு கிரையத்தொகையையும் கொடுத்துவிட்டார். அதை காட்ட ரசீது உள்ளதா என்றால் இல்லை. கிரைய தொகை கொடுக்காததால் 1ம் பிரதிவாதி அவர் கொடுத்த பவரை

01.11.2012ல் ரத்து செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, ஆனால் அதற்கு முன்பாக 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தை இறந்துவிட்டார், அவரும் சேர்ந்து தான் பவர் எழுதிக்கொடுத்தார்.

3. பவர் ரத்து செய்த விபரம் எனக்கும் 3, 5ம் பிரதிவாதிகளுக்கும் தெரியும் என்றால் சரியல்ல, தெரியாது. 2ம் பிரதிவாதி தனக்கு பாதி பாகம் உள்ளதாக சொல்லி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் 1ம் பிரதிவாதியின் 1/3 பாகத்தை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது, விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தது அப்போது எனக்கு தெரியாது. அதேபோல் 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் 1ம் பிரதிவாதியின் 1/3 பாகத்தை பொறுத்து கட்டுப்படுத்தாது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு அவருக்கு 2011ல் ஏற்பட்ட வாகன விபத்தினால் ஞாபகமறதி ஏற்பட்டு இருந்து வந்தார் என்றால் சரிதான், ஆனால் 1 மாதம் மட்டும் அப்படி இருந்தது. அவருக்கு 1மாதம் அப்படியிருந்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அதற்கு பின்னர் அவர் அநேகநடவடிக்கைகளில் ஈடுபட்டார். 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பாக விடுதலை பத்திரம் மற்றும் 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் பற்றியும் 1ம் பிரதிவாதிக்கு 2013ல் தெரியும் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

4. 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெற்றோர்கள் இறந்தபின்னர் அவர்கள் கூட்டாக அனுபவித்து வந்த பெண் பிள்ளைகளுக்கு சேரவேண்டிய பாகத்தை 3ம் பிரதிவாதி கொடுத்துவந்தார் என்றால் சரிதான், ஆனால் 2ம் பிரதிவாதிதான் கொடுத்துவந்தார், 3ம் பிரதிவாதி கொடுக்கவில்லை. 1ம் பிரதிவாதியின் பெற்றோர்கள் இறப்பிற்கு பின்னர் 1ம் பிரதிவாதி கூட்டு சுவாதினத்தில் இருந்துவந்தார் என்றால் சரியல்ல. 2, 3ம் அயிட்ட சொத்துக்களை பொறுத்து எனக்கு 2/3 பாகம் தான் உள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் 3,4ம் அயிட்டசொத்துக்களை பொறுத்து 5ம் பிரதிவாதிக்கு 2/3 பாகம் தான் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கோரியுள்ளதுபோல் அவருக்கு வழக்கு சொத்துக்களில் 1/3 பாகம் உள்ளது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் கணவர் எழுதியதாக சொல்லப்படும் கடிதத்திற்கும்

இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பொறுத்து என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள பட்டா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>வாதிகளின் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2ம் பிரதிவாதி தனக்கு பாதி பாகம் உள்ளதாக கூறி வழக்கு சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் அடிப்படையில் என் தகப்பனார் 3ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஓம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.